## பல்கேரியா



# சோஃபியாவிற்கு பிடித்த புத்தகம்

*சோஃபியா அந்த சிவப்பு வேதாகமம்தான் தனக்கு மிகவும் பிடித்தமானது என்று முடிவு செய்திருந்தாள்.*

**ஆசிரியர் குறிப்பு:** *இந்த வாரத்தின் ஊழியச்சம்பவம் பல்கேரியாவின் சோபியா நகரில் உள்ள கலர்ஃபுல் ஹோப் என்கிற செவந்த்-டே அட்வெண்டிஸ்ட் மழலையர் பள்ளியைப்பற்றியது. இந்தக் காலாண்டின் பதிமூன்றாவது வார ஓய்வுநாள் காணிக்கையின் ஒரு பகுதி அல்லது காலாண்டு ஊழியத்திட்டக் காணிக்கையின் ஒரு பகுதி இந்தப் பள்ளிக்கு வழங்கப்படும்.*

பல்கேரியாவைச் சேர்ந்த புத்திசாலித்தனமான, கவனிப்புத்திறன் மிக்க இரண்டு வயது சிறுமிதான் சோஃபியா. அவளது பெற்றோருக்கு மதத்தில் ஆர்வம் கிடையாது, அவள் தன் வீட்டில் கடவுளைப்பற்றி கேள்விப்பட்டதே இல்லை. ஆனால், பல்கேரியாவின் தலைநகரான சோஃபியாவில் உள்ள ஒரு செவந்த்-டே அட்வெண்டிஸ்ட் மழலையர் பள்ளியானது சிறப்பாக கல்விகற்பிப்பதாக அவளுடைய பெற்றோர் கேள்விப்பட்டிருந்தனர். அதனால் சோஃபியா கண்டிப்பாக அங்குதான் படிக்கவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர்.

மழலையர் பள்ளியில் ஒவ்வொரு நாள் காலையும் சொல்லப்பட்ட வேதாகம கதைகள் சோஃபியாவிற்கு மிகவும் பிடித்துப்போயின. அவள் அந்தக்கதைகளை ஆவலோடு கேட்டாள், அவற்றில் பலவற்றை மனப்பாடமாகத் தெரிந்துகொண்டாள்.

சோஃபியாவிற்கு மூன்று வயதானபோது, வேதாகம கதைகளுக்கு இடையே உள்ள தொடர்புகளை அவளால் புரிந்துகொள்ளமுடிந்தது. ஒரு நாள், சிம்சோனின் கதையை ஆசிரியை வாசித்து, துன்மார்க்கரான பெலிஸ்தியர்கள் சிம்சோனைப்

பிடித்து சிறையில் அடைத்த சம்ப வம்பற்றிக் கூறினார்.

அதைக் கேட்ட சோஃபியா, 'ஓ, பெலிஸ்தியர்களா! கோலியாத் அந்த பெலிஸ்தியரின் வம்சத்தில் இருந்து வந்தவன்தானே' என்று கேட்டாள்.

அவள் கூறியது முற்றிலும் உண்மை! சிம்சோனைப் பிடித்த அதே பெலிஸ்தியரின் குழுவிலிருந்தே, பிற்காலத்தில் சவுல் ராஜாவும் தாவீதும் வாழ்ந்த காலத்தில் அரக்கனான கோலியாத் தோன்றினான்.

சோஃபியாவின் இந்த கவனிப் புத்திறன் அந்தப் பெண் ஆசிரியரை ஆச்சரியப்படுத்தியது. அவள் உண்மையிலேயே ஒரு அசாதாரணமான சிறுமி என்பதைப் புரிந்துகொண்டார்.

சோஃபியாவின் அம்மா ஒரு நாள் ஒரு புகைப்படத்தை ஆசிரியைக்கு அனுப்பினார். அந்தப் படத்தில், செவந்த்-டே அட்வென்டிஸ்ட் ஓய்வுநாள் பள்ளிப்பாடங்கள் அடங்கிய ஒரு சிறுவர் புத்தகத்தை சோஃபியா பார்த்துக்கொண்டிருந்தாள். அந்தப் புத்தகத்தை தான் அந்தக் குடும்பத்திற்குக் கொடுக்கவில்லை என்பதை அறிந்து ஆசிரியை ஆச்சரியமடைந்தார்.

"உங்களுக்கு அந்தப் புத்தகம் எங்கே கிடைத்தது?" என்று ஆசிரியை கேட்டார்.

ஒரு வணிக வளாகத்தில் யாரோ ஒரு புதியவர் அந்தப் புத்தகத்தை சோஃபியாவிற்குக் கொடுத்தது தெரியவந்தது.

சோஃபியாவிற்கு அந்த ஓய்வு நாள் பள்ளிப் பாடப்புத்தகம் மிகவும் பிடித்திருந்தது. ஆனால் அவளுக்கு மிகவும் பிடித்த புத்தகம், மழலையர் பள்ளியில் ஆசிரியர் அவளுக்குக் கொடுத்த ஒரு சிறுவர் வேதாகமம் ஆகும். அவள் அந்த வேதாகமத்தை வீட்டிற்கு எடுத்துச் சென்று, தினமும் அதிலுள்ள வண்ணமயமான படங்களைப் பார்ப்பாள். பக்கங்களைப் புரட்டும்போது, மழலையர் பள்ளியில் கேட்ட வேதாகமச் சம்பவங்களை நினைவுகூருவாள்.

பின்னர் ஒருநாள், சோஃபியா தனது கைகளில் வேறொரு வேதாகமத்தை, அதாவது, ஒரு சிறிய, சிவப்பு நிற புத்தகத்தைச் சுமந்துகொண்டு மழலையர் பள்ளி முழுவதும் நடந்துசெல்வதை ஆசிரியை கவனித்தார். அன்று நாள் முழுவதும் அதை தன் கைகளிலேயே வைத்திருந்தாள். கடைசியாக, ஆசிரியை அவளிடம், "நீ ஏன் இந்த வேதாகமத்தை எல்லா இடங்களுக்கும் எடுத்துச் செல்கிறாய்?" என்று கேட்டார்.

அதற்கு சோஃபியா, "இது எனக்கு மிகவும் பிடித்த புத்தகம். இது என் வீட்டில் இல்லையே என்று எனக்கு வருத்தமாக இருக்கிறது. இப்போது, நான் பாட்டி வீட்டிற்குச் செல்லவேண்டும், இந்தப் புத்தகத்தை அங்கு எடுத்துச் செல்லமுடியாது" என்றாள்.

ஆசிரியை ஆச்சரியமடைந்தார். சோஃபியா தன் வீட்டிலிருந்த தனது சிறுவர் வேதாகமத்தை எவ்வளவு நேசித்தாள் என்பது அவருக்குத் தெரியும். அந்த சிறிய, சிவப்பு நிற வேதாகமத்தில் எழுத்துக்கள்

மிகச்சிறியதாக இருந்தன. மேலும் அதில் சிறுவர் வேதாகமத்தைப்போல அழகான படங்கள் இல்லை. ஆனாலும் அன்றைய தினம், சோஃபியா அந்த சிவப்பு வேதாகமம்தான் தனக்கு மிகவும் பிடித்தமானது என்று முடிவு செய்திருந்தாள்; அதைவிட்டு பிரிய அவளுக்கு மனமில்லை.

அன்று மதியம் சோஃபியா மழலையர் பள்ளியை விட்டு வெளியேறும்போது, ஆசிரியை அந்தச் சிறிய, சிவப்பு நிற வேதாகமத்தை அவளுக்குப் பரிசாகக் கொடுத்தார். சோஃபியா மிகவும் மகிழ்ச்சியடைந்தாள். அவள் அதை வீட்டிற்கு எடுத்துச் சென்றாள், பின்னர் வார இறுதியில் தன் பாட்டி வீட்டிற்கும் எடுத்துச் சென்றாள்.

"சோஃபியா வளர்ந்து வருகிற விதத்தைப் பார்க்க நான் ஆவலாக இருக்கிறேன். அவளுக்கு தேவனுடன் மிகவும் ஆழமான தொடர்பு இருக்கிறது. இன்றுகூட, எங்களுடைய நகரத்திற்காகவும், எங்களுடைய மழலையர் பள்ளியில் உள்ள தாவரங்களுக்காகவும் காலை வழிபாட்டின்போது ஜெபித்தாள்" என்று அவளுடைய ஆசிரியர் மரியா கூறினார்.

இந்தக் காலாண்டு காணிக்கையின் ஒரு பகுதி, கலர்ஃபுல் ஹோப் மழலையர் பள்ளியானது வாடகை கட்டிடத்தில் இருந்து சோபியா நகரில் உள்ள சொந்தக் கட்டிடத்திற்கு மாற உதவும். இங்கு வரும் குழந்தைகளில் பாதிக்கும் மேற்பட்டோர்செவந்-டேஅட்வென்டிஸ்ட் திருச்சபையைச் சேராத குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர். சிலர் தேவனை நம்புவதுகூட இல்லை. பல்கேரியாவில் மக்களின் வாழ்க்கையை மாற்றுகிற இந்தத் திட்டத்திற்கு நீங்கள் அளிக்கும் தாராளமான ஆதரவிற்கு நன்றி.

## கதைக் குறிப்புகள்

- வரைபடத்தில் பல்கேரியாவைப் பாருங்கள். பின்னர், கலர்ஃபுல் ஹோப் மழலையர் பள்ளி அமைந்துள்ள அதன் தலைநகரான சோஃபியாவைக் கவனியுங்கள்.
- முதல் பக்கத்தில் உள்ள புகைப்படம், ஆசியை மரியா சோஃபியாவுடன் நடந்து செல்வதைக் காட்டுகிறது.
- மழலையர் பள்ளிக்கு அருகிலுள்ள விளையாட்டு மைதானத்தில், சோஃபியா மற்றும் மற்றொரு குழந்தையுடன் ஆசிரியை மரியா நடந்துசெல்லும் வீடியோவைக் காண்பதற்கு: ***bit.ly/Sophia-EUD.***
- 1925–ஆம் ஆண்டில், கிரீஸ் மற்றும் பல்கேரியா ஆகிய நாடுகள் 'தெருநாய் சண்டை' என்று அழைக்கப்படும் ஒரு மோதலில் ஈடுபட்டன.
- பல்கேரியா ஐரோப்பாவிலேயே மிகச்சிறந்த பல்லுயிர் பெருக்கத்தைக் கொண்ட நாடுகளில் ஒன்றாகும். இந்த நாட்டில் 3 தேசிய பூங்காக்கள், 11 இயற்கை பூங்காக்கள், 10 உயிர்வெளிக் காப்பகங்கள் மற்றும் 565 பாதுகாக்கப்பட்ட பகுதிகள் உள்ளன.
- பிரெஞ்சு வாசனை திரவியங்களுக்குப் பயன்படுத்தப்படும் லாவெண்டர் மற்றும் ரோஜா எண்ணெய்களை உலகிலேயே அதிக அளவில் உற்பத்தி செய்யும் நாடு பல்கேரியா.